B. வருவாய் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

(ரூபாய் ஆயிரத்தில்.)

கோரிக்கை		
57	சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	55,02
58	சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.	10,33,00
61	பல்வகை மூலதனச் செலவு	3,21,39
	மொத்தம்—B வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு	22,37,28

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

62	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	7,08,94
	பெரு மொத்தம்	1,61,28,51

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5 சட்டமுனவடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''
எனக் கோருகிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.

'' சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 25-9-1992 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் ''
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க.